DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 233/2025
Miscellaneous :
Sessions : PW 1
Deposition of Witness for

**எதிரிகள் ஆஜர்**

| Name | மணிகண்டன் |
|---|---|
| Father / Husband Name | படவேட்டான் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 02.12.2025

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது வேடந்தாங்களில் வசித்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். 01.05.2019 அன்று காலை 10.00 மணியளவில் என் அம்மாவின் தம்பியான ஆஜர் எதிரி அண்ணாமலை என் வீட்டக்கு வந்து சொத்தை பிரிப்பதற்கு என் அம்மாவிடம் ஆதார் கார்ட்டை கேட்டார். என் அம்மா தரமுடியாது என்று சொல்லிவிட்டார். அதன் பிறகு அண்ணாமலை சென்று தயாளனை கூட்டிவந்து என் அம்மாவை தேவிடியா, பேபர்ஸ் வெளியே வாடி என்று அண்ணாமலையும், தயாளனும் என் அம்மாவை அசிங்கமாக திட்டினார்கள். வெளியே வந்த அம்மாவை அடித்து வெளியே இழுத்துவந்தனர். தேவி என்பவர் என் அம்மாவின் முடியை பிடித்து அடித்தார். பிறகு வீரராகவன், தயாளன், அண்ணாமலை, பூபாலன் மற்றும் தேவி ஆகியோர் முடியை பிடித்து அடித்தார்கள்.

2. பூபாலன் என்பவர் என் அம்மாவை கொம்பால் அடித்தார், பூபாலன் கையில் கைத்தியை வைத்துக்கொண்டு உன்னை வெட்டிவிடுவேன், உன்னை நான் என்ன செய்கிறேன் பார், இந்த ஊரில் எப்படி வாழ்கிறீர்கள் என்று பார்க்கிறேன் என்று கூறினார். தயாளன் என்பவர் என்னை பிடித்து சாவியால் என் கழுத்தில் குத்திவிட்டார். அவர்கள் அடித்துவிட்டு சென்றுவிட்டார்கள். நான் என் அம்மாவை மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்துச்சென்று பின்னர், மேற்படி சம்பவம் தொடர்பாக 02 ம் தேதி புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் புகாரை நான்தான் கொடுத்தேன். **(அசா1 கொடுத்த புகார் அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

3. அண்ணாமலையும், தயாளனும் சேர்ந்து என் தாயாரை அசிங்கமாக திட்டிய விவரத்தை புகாரிலும், போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொன்னேன். பூபாலன் கொம்பால் அடித்த விவரத்தை புகாரிலும், போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொன்னேன். போலிசார் என்னை 3 ம் தேதி காலையில் சுமார் 7 முதல் 10 மணிக்குள் என் வீட்டில் வைத்து விசாரித்தார்கள்.

மருத்துவமனைக்கு நானும் என் அம்மாவும் சென்றோம். யார் முதலில் சிகிச்சை பெற்றுக்கொண்டோம் என்றால் என் அம்மா. சொத்தை பிரிப்பதற்காக அண்ணாமலை ஆதார் கார்ட் கேட்டார் என்று புகாரிலும், போலிசார் விசாரணையிலும் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொன்னேன்.

4. பட்டியல் சாட்சி இரண்டு என்னுடைய தாயார், பட்டியல் சாட்சி 3 என்னுடைய அண்ணன், சாட்சி 4 என்னுடைய தம்பி, சாட்சி 5 எங்கள் ஊர்காரர், பட்டியல் சாட்சி 5ன் பெயர் சுப்புராயன், எதிரி தேவி என் தாயாரின் சகோதரி, பூபாலன், தயாளன், வீரராகவன், அண்ணாமலை ஆகியோர் என்னுடைய தாய்மாமன்கள் ஆகும். சம்பவத்தின்போது சுமார் 20 பேர் வேடிக்கை பார்த்தார்கள். வீரராகவன், அண்ணாமலை, பூபாலன் ஆகியோர் எங்கள் ஊரில் வசிக்கிறார்கள். தயாளன் மற்றும் தேவி வேறு ஊரை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். நான் மருத்துவமனைக்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் சம்பவம் நடந்த அன்று மாலையில் சென்றோம். எதிரிகள் கும்பலாக வந்து எத்தனை மணிக்கு சண்டை போட்டார்கள் என்றால் காலை 7–10 மணியளவில் சண்டை போட்டார்கள். காலையில் அண்ணாமலை வந்து எத்தனை மணிக்கு ஆதார் கார்ட் கேட்டுவிட்டு சென்றார் என்றால் அவர் கேட்டுவிட்டு சென்ற 5 நிமிடத்தில் திரும்ப வந்துவிட்டார்.

5. அந்த 5 நிமிடத்திற்குள் தான் சண்டை நடந்தது என்றால் சரிதான். போலிசார் என்னை மதுராந்தகம் அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். என் அம்மா மற்றும் தம்பியை மருத்துவமனையிலும், வீட்டிலும் வைத்து விசாரித்தார்கள். சொத்து பிரச்சனை தொடர்பாக வழக்கு ஏதாவது உள்ளதா என்றால் இல்லை. சொத்தை தற்போது வரை பங்கிடவில்லை. எல்லாருக்கும் பொதுவான சொத்தை நாங்கள் மட்டும் அனுபவித்து வருகிறோம் என்றாலும், அதை கேட்ட எதிரிகளுக்கு எதிராக பொய் புகார் அளித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 233/2025

Miscellaneous :

Sessions : PW 2

Deposition of Witness for

**எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | ஜோதி |
| Father / Husband Name | படவேட்டான் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 02.12.2025

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது வேடந்தாங்களில் வசித்து வருகிறேன். எனக்கு எழுதப்படிக்க தெரியாது. வருடம் தெரியவில்லை, ஜனவரி மாதம் 1ம் தேதி காலையில் சுமார் 9.00 மணியளவில் ஆஜர் எதிரிகள் வந்து என்னுடைய ஆதார் கார்ட்டை கேட்டார்கள். எதற்கு ஆதார் கார்ட்டை கேட்கிறீர்கள் என்று கேட்டதற்கு ஆதார் கார்ட் கொடு இல்லையென்றால் உன்னை அடிப்போம் என்று மிரட்டினார்கள். தேவி என்பவர் என்னுயை முடியை பிடித்து அடித்தார். என்னுடைய தம்பி பூபாலன் என்பவர் கம்பியை எடுத்து என் காலில் அடித்தார். நான் கத்தி அழுதேன். பூபாலன் மற்றும் தயாளன் கத்தியை எடுத்து வந்து என்னை வெட்டிவிடுவதாக மிரட்டினார்கள். நான் மயக்கம் அடைந்து கீழே விழுந்தவிட்டேன். அடிபட்ட என்னை என்னுடைய பிள்ளைகள் மருத்துவமனையில் சேர்த்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. என்னுடைய முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகள் அனைத்தையும் போலிசாரிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். பொதுவான சொத்து 6 ஏக்கர் உள்ளது. அதை எதிரிகள் தான் வைத்துள்ளார்கள். நான் மருத்தவமனையில் 20 நாள் சிகிச்சை எடுத்துவந்தேன். போலிசார் என்னை மருத்துவமனையிலும், வீட்டிலும் வைத்து விசாரித்தார்கள். நான் மருத்துவமனையில் இருந்து வீட்டிற்கு வந்த பிறகு என்னை விசாரித்தார்கள். புகார் கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் நான் சொல்லி தான் என் மகன் புகார் கொடுத்தார். நான் சொல்வதுபோல் சம்பவம் நடக்கவில்லை என்றாலும், என் மகன் கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 233/2025

Miscellaneous :

Sessions : PW 3

Deposition of Witness for

**எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | நடராஜன் |
| Father / Husband Name | படவேட்டான் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 02.12.2025

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது வேடந்தாங்களில் வசித்து மேஸ்திரி வேலை செய்து வருகிறேன். 03.05.2019 அன்று காலை 10.00 மணியளவில் அண்ணாமலை வந்து என் அம்மாவிடம் ஆதார் கார்ட் கேட்டார். அதன் பின்னர் அவர் சென்று அவரது தம்பி தங்கை ஆகிய தயாளன், பூபாலன், வீரராகவன், தேவி ஆகியோர்களை அழைத்துவந்து என் அம்மாவை ஆதார் கேட்டு கையாலும், செங்கல்லாலும் அடித்துள்ளார்கள். பூபாலன் மற்றும் தயாளன் ஆகியோர் கத்தியை எடுத்து வந்து வெட்ட வந்தார்கள். தேவி என்பவர் என் அம்மாவின் முடியை பிடித்து அடித்தார். தயாளன் என்பவர் வண்டி சாவியை எடுத்து என் தம்பியின் கழுத்தில் குத்தியுள்ளார். அதன் பிறகு நான் என் அம்மா மற்றும் தம்பியை மதுராந்தகம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துவந்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. சம்பவத்தின்போது நான் அங்கு இருந்தேனா என்றால் இல்லை, என் தம்பி போன் செய்த பிறகு தான் வந்தேன். நான் வந்தபோது சண்டை முடிந்துவிட்டது என்றால் சரிதான். பொதுவான சொத்து எவ்வளவு உள்ளது என்றால் எனக்கு தெரியாது, அம்மாவை கேட்டால் தான் தெரியும். போலிசார் என்னை சம்பவம் நடந்த அன்று 03 ம் தேதி என் வீட்டின் அருகே வைத்து போலிசார் விசாரித்தார்கள். போலிசார் விசாரணையில் 03.05.2019 அன்று காலை சண்டை நடந்த விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். போலிசார் என்னை விசாரிக்கவே இல்லை என்றால் சரியல்ல, என் தாயாரும் தம்பியும் அளித்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 233/2025

Miscellaneous :

Sessions : PW 4

Deposition of Witness for

**எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | சுப்புராயன் |
| Father / Husband Name | வேதாச்சலம் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 02.12.2025

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது வேடந்தாங்களில் வசித்து ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். சாட்சி தனசேகர் என்பவரை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். **(பார்வை மகசரில் உள்ள அசா4 ன் இரண்டாவது கையொப்பம் அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** தேதி மாதம் ஞாபகமில்லை, மணி என்பவரின் அம்மாவிற்கும், அந்த அம்மாவின் சகோதரர்களுக்கும் சண்டை நடந்தது தொடர்பாக 03ம் தேதி சுமார் காலை 7.00 மணியளவில் போலிசார் போட்டோ காட்டி விசாரணை செய்து என்னிடம் கையொப்பம் கேட்டார்கள், அதில் நானும் தனசேகர் என்பவரும் கையொப்பம் செய்தோம். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. சண்டையை நான் நேரடியாக பார்த்தேனா என்றால் பார்த்தேன். கையொப்பத்தை நான் எப்போது போட்டேன் என்றால் 03ம் தேதி காலையில் 7.00 மணிக்கு போட்டேன். 03ம் தேதி தான் சண்டை நடந்ததா என்றால் இல்லை, 03ம் தேதி விசாரணை செய்தார்கள். போலிசார் சண்டை நடந்ததை செல்போனில் காட்டினார்கள். நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன விவரம் எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. நான் கையொப்பம் போடும்போது வேறு யாரு இருந்தார் என்றால் தனசேகர் இருந்தார், வேறு யாரும் இல்லை. ஜோதி என்பவரின் மகன்கள் அனைவரும் எனக்கு நண்பர்கள். நான் அவர்களுடன் காவல் நிலையம் சென்றேனா என்றால் சென்றேன். போலிசார் போட்ட பொய் வழக்கிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.